# தூய லூர்து அன்னை ஆலயம்

50, ஓபியர் சாலை, சிங்கப்பூர் 188690

தொலைபேசி: 6294 0624 – www.lourdes.sg



| | |
|---|---|
| பங்குத்தந்தை: அருட்திரு மைக்கேல் சீத்தாராம் *frmichaelsitaram@gmail.com* | உதவிப் பங்குத்தந்தை: அருட்திரு பவுல் இயோ *fryeopaul@gmail.com* |
| உதவிப் பங்குத்தந்தை: அருட்திரு தே. நித்திய சகாயராஜ் *nithiya@catholic.org.sg* | பங்கு அலுவலகம்: *ololsec@gmail.com* *ololpastoral@gmail.com* |



| 11 பெப்ரவரி 2018 | பொதுக்காலம் 6ம் ஞாயிறு | இரண்டாம் ஆண்டு |
|---|---|---|



**நமது பங்குத் தந்தையர்**
**அனைவரும்**
**உங்கள் அனைவருக்கும்**
**தூய லூர்து அன்னை திருவிழா**
**நல்வாழ்த்துக்களைத்**
**தெரிவிக்கின்றனர்**

ALL OUR PARISH PRIESTS
WOULD LIKE TO WISH
EVERYONE A
HAPPY & BLESSED
FEAST OF
OUR LADY OF LOURDES

அன்புமிக்கச் சகோதர சகோதரிகளே! நீங்கள் இருப்பது இறைவனின் இல்லம். எனவே, உங்கள் கைத் தொலைபேசியை அமைதி நிலையில் வைக்கும்படியும், ஆலயத்தின் உள்ளே உணவு உண்பதையும், பானங்கள் அருந்துவதையும் தவிர்க்கும்படியும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம். நன்றி.

## உங்கள் சிந்தனைக்கு

புதிய ஏற்பாட்டில் மோசமான ஒரு நோயாகச் சித்தரிக்கப்படுவது தொழுநோய். சமூகத்தின் இழிவாகக் கருதப் பட்டவர்கள் இந்த தொழுநோயாளிகள். சமூகத்திலிருந்து முற்றிலுமாக ஒதுக்கி வைக்கப்பட்டார்கள். எனவே தான் மத்தேயு நற்செய்தி 10:8ல், இயேசு, 'தொழுநோயாளரை நலமாக்குங்கள்' என்ற குறிப்பிட்ட செய்தியையும் தருகிறார். இதிலிருந்தே, தொழுநோயாளரின் அவல நிலையை நாம் முழுவதும் உணர்ந்து கொள்ள முடியும். தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் இயேசுவின் காலத்திலே அடைந்த துன்பங்களுக்கு அளவே இல்லை. உடல் வலியால் மட்டுமல்ல, சமூகத்தினுடைய கொடுமையாலும் வேதனையை அனுபவித்தனர். வெறுக்கப்பட்டதோடு அல்லாமல், ஒதுக்கப்பட்டு, சமூகத்திலிருந்தே ஓரம் தள்ளப்பட்டனர். இப்படிப்பட்டச் சூழ்நிலையில் தான் இயேசு தொழுநோயாளர் ஒருவர் மீது பரிவு கொள்கிறார், அவரைத் தொடுகிறார், அவரைக் குணப்படுத்துகிறார். மனிதர்கள் மீது இறைவன் வைத்திருக்கிற இரக்கம் இங்கே வெளிப்படுகிறது.

எங்கே இரக்கம் இருக்கிறதோ, அங்கே கடவுளின் பிரசன்னம் இருக்கிறது. இயேசுவிடத்திலே இருந்த இரக்கம் அவரிடத்திலே இருந்த தெய்வீகப் பிரசன்னத்தை வெளிக்காட்டுவதாக இருக்கிறது. நாம் அனைவரும் கடவுளின் சாயலிலே, உருவத்திலே படைக்கப்பட்டிருக்கிறோம். கடவுளின் உயிர் மூச்சை ஆவியாகக் கொண்டிருக்கிறோம். நாம் ஒவ்வொருவரும் நம்மிடத்திலே இருக்கக் கூடிய இறைப் பிரசன்னத்தை உணர வேண்டுமென்றால், நாம் இரக்கக் குணம் மிக்கவர்களாக இருக்க வேண்டும். அப்போது நாம் நிச்சயமாக இறைப் பிரசன்னத்தை உணரலாம். இரக்கம் நமக்குள்ளாக இருக்கக் கூடிய வெறுப்பை அகற்றி, அன்பை வெளிப்படுத்தும். இரக்கம் நம்மையே தெய்வீக நிலைக்கு உயர்த்தும். இரக்கம் உள்ளவர்களாக வாழ நாம் முயற்சி எடுப்போம்.




## திருநீற்றுப் புதன் திருப்பலி

நாள்: 14-02-2018 புதன்

நேரம்: மதியம் 12:30 மற்றும் மாலை 6:30 மணி (ஆங்கிலம்)

இரவு 8:00 மணி (தமிழ்)

**மனந்திரும்பி நற்செய்தியை நம்புங்கள்!**

உங்கள் வீட்டிலுள்ள குருத்தோலைகளை ஆலய நுழைவில் உள்ள கூடைகளில் வைக்க வேண்டுகிறோம்.
தவக்கால வெள்ளிக்கிழமைகளில் இரவு 8 மணிக்கு சிலுவைப்பாதையும் தொடர்ந்து திருப்பலியும் நடைபெறும்.

## சீனப் புத்தாண்டு மற்றும் பொது விடுமுறைத் திருப்பலி

15-02-2018, வியாழன் ~ இரவு 11 மணிக்கு ஆங்கிலத் திருப்பலி

16-02-2018, வெள்ளி ~ காலை 9 மணிக்கு ஆங்கிலத் திருப்பலி

காலை 10:30 மணிக்குத் தமிழில் சிலுவைப்பாதையும், தொடர்ந்து தமிழில் திருப்பலியும் நடைபெறும்

(மதியம் 1 மணி முதல் ஆலய வளாகத்தின் இரும்புக் கதவுகள் மூடப்பட்டிருக்கும்)

## முழு இரவுத் திருவிழிப்பு செப வழிபாடு

17-02-2018, சனி, இரவு 9:30 முதல் காலை 5:30 வரை

இரவு முழுதும் விழித்திருந்து, நாம் சுமக்கும் பாரங்களை கடவுளிடம் இறக்கி வைத்து, அவரைப் பற்றி மேலும் அறிந்து, அவரோடு உறவாட இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

## இடைவிடா சகாய அன்னை நவநாள்

சனிக்கிழமைகளில் இரவு 8:30 மணிக்கு இடைவிடா சகாய அன்னை நவநாளும், தொடர்ந்து திவ்விய நற்கருணை ஆசீரும் நடைபெறும். அன்னையின் பரிந்துரையில் இறையருள் பெற அனைவரும் வருக.

## திருமண முன் தயாரிப்புக் கருத்தரங்கு

18-03-2018, ஞாயிறு, காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை (பல்நோக்குச் சமூகக் கூடம்)

முன்பதிவுக் கட்டணம் $30 செலுத்தி, முன்னதாகப் பெயர்களைப் பதிவு செய்வோருக்கு,

கருத்தரங்கு முடிந்தவுடன் பங்கேற்புச் சான்றிதழ் தரப்படும்.

தொடர்பு: திரு. ரெக்ஸ் (98226171)

## புனித வின்சென்ட் தே பவுல் காணிக்கை

கடந்த ஞாயிறு 04-02-2018 அன்று எடுக்கப்பட்ட காணிக்கையில் கிடைத்த மொத்தத் தொகை S$4536.50.
வசதியற்றோருக்கு வழங்கப்பட்ட தொகை S$4520.00.
தாராளமாகக் கொடுத்த உங்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி.

## ஆலயத் துப்புரவு மற்றும் தூய்மைப் பணி

நாள்: 18-02-2018, ஞாயிறு மதியம் 2:30 மணி
ஆலயத் துப்புரவு மற்றும் தூய்மைப் பணியை முன்னிட்டு நமது ஆலயம்
மதியம் 2:30 முதல் 4:00 மணி வரை மூடப்பட்டிருக்கும்.
நம் ஆலயத்தைத் தூய்மைப்படுத்தத் தன்னார்வலர்களை அன்புடன் அழைக்கிறோம்.

## GIFT திட்டத்திற்கான நினைவூட்டல்

அடுத்த வாரயிறுதித் திருப்பலிகளில் எடுக்கப்படும் இரண்டாம் காணிக்கை நமது உயர்மறைமாவட்டத்தின் GIFT (நம்பிக்கையுடனும் நன்றியுணர்வோடும் கொடுத்தல்) திட்டத்திற்காக வழங்கப்படும். அதற்கான உங்கள் பங்களிப்புகளைக் கொண்டு வரும்படி அன்புடன் நினைவூட்டுகிறோம். இக்காணிக்கையானது நமது உயர்மறைமாவட்டத்தில் செயல்படும் பல்வேறு அமைப்புகளுக்காகவும் கட்டிடத் திட்டங்களுக்காகவும் பயன்படுத்தப்படும். தாராள மனதுடன் கொடுக்கும் உங்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி.

## மறையுரைத் தொடர்: யார் இயேசு?

நமது பங்குத் தந்தையர் மூவரும் "யார் இயேசு" என்ற தலைப்பில் மறையுரைத் தொடர் ஒன்றைத் தொடங்கியுள்ளனர். இதன் முதல் அமர்வு 22-02-2018 (வியாழன்), இரவு 7:45 மணிக்கு நடைபெறும். ஆங்கிலத்தில் புகழ் ஆராதனை, மறையுரை, செப வழிபாடு கொண்ட இந்நிகழ்ச்சியில் கலந்து, பயனடைந்து, உங்கள் ஆன்மீக வாழ்வு செழிப்படைய அன்புடன் அழைக்கிறோம்.

## விவிலியக் குறுக்கெழுத்து

கீழுள்ள வசனங்கள் இன்றைய வாசகங்களிலிருந்து எடுக்கப்பட்டவை. கோடிட்ட இடங்களுக்கான பதில்கள் இங்குள்ள கட்டங்களுக்குள் மறைந்து கிடக்கின்றன. அவை மேலிருந்து கீழாகவோ, கீழிருந்து மேலாகவோ, இடமிருந்து வலமாகவோ, வலமிருந்து இடமாகவோ, குறுக்காகவோ இருக்கலாம். இது சிறுவர்களுக்கு மட்டுமல்ல, மற்றவர்களும் முயற்சி செய்யலாம். கண்டுபிடிக்க முடியவில்லையென்றால் மீண்டும் ஒரு முறை வாசகங்களைப் படித்து முயற்சி செய்யவும்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ம் | ர | ப | தி | அ | க் | க | அ | ரு | கு |
| கு | ட் | ய | யே | வி | பே | டு | ரு | தீ | க் |
| இ | து | ன் | சு | வி | தா | தோ | தா | கா | து |
| ர் | றை | ப் | ம் | ட | லி | க | பு | பி | த் |
| ப | றி | வா | து | வு | டு | ன | தோ | சா | ய |
| ப் | க | ர | க் | ப | ய் | ம | வ | க | ளை |
| க | ட | வே | ப் | கி | மா | ழு | ம் | டு | பா |
| கி | க | ன | ரி | ர | ன | யா | மை | னி | த |
| தீ | ட் | டு | ள் | ள | வ | ர் | டு | யி | கா |
| மா | ட் | சி | க் | கா | க | வே | ளி | ல் | ன் |

1. அவர் தொழுநோயாளி. அவர் __________, எனக் குரு அறிவிப்பார்.
2. எனவே, அவர் __________ வெளியே தனியாகக் குடியிருப்பார்.
3. ஆண்டவரே, நீரே எனக்குப் __________.
4. நம்மிடையே பெரிய __________ ஒருவர் தோன்றியிருக்கிறார்.
5. எல்லாவற்றையும் கடவுளுடைய __________ செய்யுங்கள்.
6. பலரும் மீட்படையும்படி அவர்களுக்குப் __________ தருவதையே நாடுகிறேன்.
7. இதை யாருக்கும் சொல்ல வேண்டாம், __________இரும்.
8. இயேசு வெளியே __________இடங்களில் தங்கி வந்தார்.

## ஞாயிறு வாசகங்கள்



| | |
|---|---|
| முதலாம் வாசகம்: | லேவியர் 13 : 1 – 2, 44 – 46 |
| பதிலுரைப்பாடல்: | திருப்பாடல் 32 : 1 – 2, 5, 11 |
| பதிலுரை: ஆண்டவரே! நீரே எனக்குப் புகலிடம். | |
| இரண்டாம் வாசகம்: | 1 கொரிந்தியர் 10 : 31 – 11 : 1 |
| வாழ்த்தொலி: அல்லேலூயா! அல்லேலூயா! நம்மிடையே பெரிய இறைவாக்கினர் ஒருவர் தோன்றியிருக்கிறார். கடவுள் தம் மக்களைத் தேடி வந்திருக்கிறார். அல்லேலூயா! | |
| நற்செய்தி வாசகம்: | மாற்கு 1 : 40 – 45 |

## ஆலயத் திருப்பலி நேரங்கள்



| | |
|---|---|
| வார நாட்கள் (ஆங்கிலம்) : | மதியம் 12:30 & மாலை 6:30 மணி |
| முதல் வெள்ளி (ஆங்கிலம்) : | மாலை 7:30 மணி |
| சனி (ஆங்கிலம்) : | மாலை 6:00 & 7:30 மணி |
| ஞாயிறு (ஆங்கிலம்) : | காலை 7:30, 11:30 & 1:00 மணி |
| ஞாயிறு (தமிழ்) : | காலை 9:30 & மாலை 6:30 மணி |
| பொது விடுமுறை (ஆங்கிலம்) : | காலை 9:00 மணி |
| பொது விடுமுறை (தமிழ்) : | காலை 10:00 மணி |

## ஆலயத்தில் நடைபெறும் பக்தி முயற்சிகள்

| | | |
|---|---|---|
| ஆங்கிலம் | வார நாட்களில் செபமாலை : | மதியம் 11:55 மணி |
| | திங்கள் & புதன் செபமாலை : | மாலை 5:55 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | வெள்ளி மாலை 6:30 மணி<br>தொடர்ந்து திருப்பலி 7:30 மணி |
| | தூய ஆவியின் கத்தோலிக்க அருங்கொடை : | வெள்ளி மாலை 7:45 மணி |
| தமிழ் | செபமாலையும் விவிலியப் பகிர்வும் : | ஞாயிறு காலை 11:30 மணி |
| | செபமாலை : | ஞாயிறு மாலை 6:00 மணி |
| | லூர்து அன்னை நவநாள் : | முதல் ஞாயிறு காலை 8:30 மணி |
| | சாட்சியக் கூடாரம் : | முதல் ஞாயிறு மதியம் 2:00 மணி |
| | திரு இருதய திருமணி ஆராதனை : | முதல் ஞாயிறு மாலை 5:30 மணி |
| | மரியாயின் சேனை : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | குழந்தை இயேசு நவநாள் : | செவ்வாய் மாலை 4:30 மணி |
| | இறை இரக்கச் செபம் : | வெள்ளி மாலை 5:45 மணி |
| | இடைவிடா சகாய அன்னை நவநாள் : | சனி மாலை 8:00 மணி |
| | புனித பியோ செப வழிபாடு : | மாதத்தின் 23ம் தேதி இரவு 8:30 மணி |

தூய லூர்து அன்னை சமூகக் கூடக் கட்டுமானத் திட்டமானது மறுபரிசீலனை செய்யப்படுகிறது. எனவே, மறு அறிவிப்பு வரும் வரை அதற்கான நிதி திரட்டும் முயற்சிகளை உயர்மறைமாவட்டம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கும்படிக் கேட்டுக்கொண்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**உங்கள் கவனத்திற்கு:** உயர்மறைமாவட்டம் மற்றும் பங்குத்தந்தையின் அனுமதியின்றி நம் பங்கு வளாகத்திலோ அல்லது உங்கள் இல்லத்திலோ உங்களுக்காகச் செபிப்பதாகக் கூறிக்கொண்டு, நன்கொடை கேட்பவர்களை ஏற்க வேண்டாம். ஆலயத்திற்கு நீங்கள் கொண்டு வரும் உங்கள் உடைமைகளுக்கு நீங்களே பொறுப்பு.